இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“எருசலேமே, உன் துன்ப துயரத்தின் ஆடைகளைக் களைந்துவிடு; கடவுள் உனக்கு அருளும் மாட்சியின் பேரழகை என்றென்றும் ஆடையாக அணிந்துகொள். கடவுளிடமிருந்து வரும் நீதியை ஆடையாய்ப் புனைந்துகொள்; என்றும் உள்ளவரின் மாட்சியை மணிமுடியாக உன் தலைமீது சூடிக்கொள். கடவுள் வானத்தின் கீழ் உள்ள எல்லா நாடுகளுக்கும் உன் பேரொளியைக் காட்டுவார். ‘நீதியில் ஊன்றிய அமைதி’, ‘இறைப்பற்றில் ஒளிரும் மாட்சி’ என்னும் பெயர்களால் கடவுள் உன்னை என்றென்றும் அழைப்பார்.” (பாருக் *5:1-3*)

# சிறந்த உலகை உருவாக்கும் முயற்சிக்கு பல்சமயக் கூட்டங்கள் உயிரளிக்கின்றன

வத்திக்கான்: ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கும், ஒன்றிணைந்து செயல்படுவதற்கான பொதுவான விருப்பத்தை வலுப்படுத்துவதற்கும், உதவுவதற்கும் பல்சமயக் கூட்டங்கள் உயிரளிக்கின்றன என்றும், சமூக நட்பு, ஒற்றுமை, அமைதி என்னும் மூன்றினை நாம் மறந்துவிடக் கூடாது, நம்பிக்கையை விதைப்பதற்கு ஒருபோதும் நாம் சோர்ந்துவிடவோ அஞ்சவோக் கூடாது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நவம்பர் 25, திங்கள் கிழமை வத்திக்கானில் பன்னாட்டு ஜெயின் மண்டலக்குழு உறுப்பினர்கள் ஏறக்குறைய 41 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சமூகத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள் போன்றோரின் நல்வாழ்விற்காக எடுக்கப்படும் முன்முயற்சிகள் தீவீரமாகவும் முழு அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சமூகத்தை ஆட்கொள்ளும் பெரும்பாலான பிரச்சனைகள் தனித்துவம் மற்றும் அலட்சியத்தால் ஏற்படுகின்றன என்றும், இது பலரை குறிப்பாக தங்களது அருகில் வாழ்பவர்களின் மாண்பு மற்றும் உரிமைகளை புறக்கணிக்க வழிவகுக்கிறது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.


பன்னாட்டு ஜெயின் மண்டலக்குழு உறுப்பினர்களுடன் திருத்தந்தை பிரான்சிஸ்

ஒருபுறம் சிறுபான்மையினர் மேல் ஆதிக்கம் செலுத்துகின்ற, ஒதுக்கி வைக்கின்ற குழுக்கள் இருந்தாலும், மறுபுறம், சமூக நட்பு, ஒற்றுமை மற்றும் நிலையான அமைதியைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்ட குழுக்களும் இச்சமூகத்தில் வாழ்கின்றன என்றும் கூறினார் திருத்தந்தை.

பல்சமய உரையாடல் திருப்பீடத்துறையின் தலைவர் கர்தினால் AYUSO GUIXOT Miguel Ángel அவர்கள் உடல் நலமில்லாமல் இருப்பதை எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள் அவருக்காக சிறப்பாக செபிக்க வலியுறுத்தினார்.

மனிதர்களைப் படைத்த கடவுள் அவர்களுக்கு சமமான உரிமைகள், கடமைகள், மனித மாண்புகள் கொண்டு படைத்தார் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், அனைவரும் சகோதர சகோதரிகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், இத்தகைய உலகளாவிய சகோதரத்துவத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது என்றும் எடுத்துரைத்தார்.

நல்லெண்ணம் கொண்ட ஒவ்வொருவரும் அன்பைப் பரப்பலாம் என்றும், வேறுபாடுகளை மதித்து, தேவையிலிருப்பவர்களுக்குத் தங்களை அர்ப்பணித்து வாழலாம் என்றும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், இச்செயலே ஒருவரையொருவர் அன்பு செய்யவும் நமது பொதுவான இல்லமாகிய இப்பூமியைக் கவனித்துக்கொள்ளவும் எப்போதும் புதிய ஆற்றலை அளிக்கிறது என்றும் கூறினார்.

***மெரினா ராஜ் – வத்திக்கான்***

# பெங்களூருவில் தேசிய கத்தோலிக்க ஊடக மாநாடு

வாழ்க்கையின் அனைத்து அளவீடுகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தை உணர்ந்து, கிறிஸ்துவின் நற்செய்தியை மிகவும் பொருத்தமான முறையில் அறிவிக்க உலகலாவியத் திருஅவை அதன் திறனைப் பயன்படுத்த முயலும் வகையில் இந்தியாவின் பெங்களூருவில் தேசிய கத்தோலிக்க ஊடக மாநாடு சிறப்பாக நடைபெற்றதாக செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

நவம்பர் 23- 24, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில், இந்தியாவின் பெங்களூருவிலுள்ள புனித யோவான் மருத்துவக் கல்லூரியில் இம்மாநாடு இடம்பெற்றது என்றும், இதில் அருள்பணியாளர்கள் மற்றும் இருபால் துறவியர் உட்பட ஏறத்தாழ 285 பேர் பேரார்வமுடன் பங்கேற்று பயனடைந்தனர் என்றும் அச்செய்திக் குறிப்பு மேலும் உரைக்கிறது.


*AI* எனும் செயற்கை நுண்ணறிவு திறனை கற்கும் அருட்சகோதரிகள்

அர்ப்பண வாழ்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் இந்த டிஜிட்டல் யுகத்தை திறம்பட வழிநடத்தவும், தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி அவர்களின் இறைப்பணியை மேம்படுத்தவும், திருஅவையின் பணியை வலுப்படுத்தவும் "Illuminare 2024: Nurturing Digital Stewardship" என்ற மையக்கருத்துத் தேர்வு செய்யப்பட்டதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்பீடத் தகவல் தொடர்புத் துறை, இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் (CBCI) சமூகத் தொடர்புத் துறை, இந்திய ஆயர் பேரவை, ஆசிய ஆயர் பேரவையின் கூட்டமைப்பு, இந்திய துறவியர் பேரவை ஆகியவற்றுடன் இணைந்து தொன்போஸ்கோவின் சமூகத் தொடர்பு பிரிவு மற்றும் தெற்காசிய சலேசியன் சமூகத் தொடர்பு அமைப்பு (BOSCOM) இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

இம்மாநாட்டில் திருப்பீடத் தகவல் தொடர்புத்துறையின் தலைவர் முனைவர் பவுலோ ருபினி, திருப்பீடத் தகவல் தொடர்புத் துறையின் இறையியல்-மேய்ப்புப் பணித் துறையின் இயக்குனர் Nataša Govekar, பெங்களூரு பேராயர் பீட்டர் மச்சாடோ, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் Derek O’Brien மற்றும் சமூகத் தொடர்பு கவுன்சிலர் அருள்பணியாளர் Gildasio Santos, SDB உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினர் என்றும் அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

**செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்**

# புனித அலோசியஸ் பங்கில் புதுநன்மை கொண்டாட்டம்

மந்தின்: இங்குள்ள புனித அலோசியஸ் பங்கில் கடந்த 24 நவம்பர், பெரும் மகிழ்ச்சிக்குரிய நாளாக அமைந்தது. பன்னிரண்டு மாணவர்கள் அவர்களது நம்பிக்கை வாழ்வு பயணத்தின் ஒரு மைல் கல்லாக 'புது நன்மை' விழாவைக் கொண்டாடினர்.



இந்த 12 மாணவர்களில் நான்கு பேர் இடைநிலைப் பள்ளி மாணவர்களாவர். இவர்களில் 14 வயது ராயன் என்பவரும் 14 வயதுக்கும் 17 வயதுக்கும் உட்பட்ட, 3 கடசான் வில்சன் சகோதரர்களும் ஆவர். இவர்களின் மறைக்கல்வி ஆசிரியர் இக்கி என்பவரின் கீழ் முறையாக தங்கள் மறையறிவை பெற்ற இவர்கள் தூய ஆவியாரின் தூண்டுதலில் நன்கு பயிற்று விக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், இவர்கள் மத்தியில் எலினா மெய் ஜென் டோர்னெலஸ் பிரான்சிஸ் என்பவர் மிகவும் துடிப்புடனும் ஆர்வமுட னும் காணப்பட்டார்.

அவர்களின் உணர்வுகளைப் பற்றி கேட்ட போது, மாணவர்கள் எளிய ஆனால் இதயப்பூர்வமான உணர்வைப் பகிர்ந்து கொண்டனர்: அவர்கள் கிறிஸ்துவைப் பெறுவதில் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாக வும் இருந்தனர். நம்பிக்கை மற்றும் அன்பின் இந்த தூய வெளிப்பாடு, நற்கருணையின் மீது அவர்கள் கொண்டிருக்கும் பேரன்பை வெளிப்படுத்தியது.

# கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி ஆணையத்தின் ஏற்பாட்டில் மறைக்கல்வி ஆசிரியர் முகாம்

கோலாலம்பூர்: கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி ஆணையத்தின் ஏற்பாட்டில் கடந்த 16 நவம்பர் முதல் 17 நவம்பர் 2024 - வரை தமிழ் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான இறையியல் மாதாந்திர வகுப்பின் இறுதி வகுப்பாக இரண்டு நாள் முகாம் நடைபெற்றது. இந்த உயர் மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி கழகத்தில் நடைபெற்ற இவ்வகுப்புக்கு தொடக்கத்தில் பதிவு செய்தவர்கள், இறைவனை பற்றி அதிக அளவில் எனக்கு தெரியும் என்று எண்ணத்தோடு வந்திருந்தனர். ஆனால், 'என் அன்பார்ந்த மகனே/ மகளே, நீ என்னை பற்றி அறிந்தவையோ கைம்மண்ணளவு, என்னை பற்றி கல்லாததோ உலகளவு' என்று இறைவன் உரைத்து போல் அமைந்தது இந்த முகாம்.



பல்வேறு சொற்பொழிவுகளும், நிகழ்ச்சி களும் பங்கேற்பாளர்களுக்காக நடத்தப் பட்டது. நடைபெற்ற ஒவ்வொரு சொற்பொழிவும், நம் இறைவன் எவ்வளவு இனியவர் என்பதை தாண்டி நம் இறைவன் மற்றும் நம் மாசற்ற அன்னை மரியா நமக்கு என்னவெல்லாம் செய்திருக்கிறார்கள், செய்யவல்லவர்கள் என்பதை எடுத்துக் காட்டியது. ஒவ்வொரு சொற்பொழிவின் முடிவிலும், பங்கேற் பாளர்கள் தங்கள் கேள்விகளை எழுப்பி, வினாக்களுக்கான விளக்கங்களை பெற்ற தோடு, குழுவாக விவாத்திலும் பங்கேற்றனர்.

இதன் மூலம் இறைவனை, திருஅவையை மற்றும் மறைக்கல்வி குறித்துப் பல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம் கிடைத்தது. என் வாழ்நாள் முழுவதும் ஒரு கிறிஸ்துவனுக்கு விவிலியம் மட்டும் போது மானதே என்று எண்ணி கொண் டிருந்தேன், ஆனால் திருவிவிலியம் எவ்வளவு அவசியமோ ஒரு கிறிஸ்துவனுக்கு, அதே அளவுக்கு நம்முடைய கிறிஸ்துவ வழிமரபுகளும் அவசியம் என்றறிந்துக் கொண்டோம். முகாமின் இரவு பகுதி ஆன்மிக சிந்தனை, தியானம் மற்றும் ஆராதனை நிகழ்ச்சிகளால் நிறைந்திருந்தது.

இறுதியாக, ஒருவரை ஒருவர் பிரிய மனமில்லாமல் விடை கொடுத்து சென்றது ஒருபுறம் இருந்தாலும், தனிமனித ஆன்மிக வளர்ச்சிக்கும், சமூக நலத்திற்கும் இந்த இறையியல் முகாம் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது என்று கூறலாம். அழைக்கட்டவர்களோ பலர், தேர்ந் தெடுக்கப் பட்டவர்களோ சிலர் என்பதுபோல், இறைவன் பல்வேறு பங்குகளிலிருந்து எங்களை கண்டெடுத்து, இந்த இறையியல் முகாமில் கலந்து கொள்ள வாய்ப்பளித்த டாக்டர் ஸ்டீவன் மற்றும் அருள்சகோதரி ரீத்தா அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஷரின் மிசெல் -

# 2025, யூபிலி ஆண்டுக்கான இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கைக்கும் தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில் நீர் பற்றியெரியச் செய்தப் பிறர் அன்புக் சுடரும், உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்ப வனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட உள்ளங்கள் புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள் விண்ணக வாழ்வுக்கான ஆர்வத்தை `எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய எம்மில் தூண்டி எழுப்புவதாக! அதே அருள் எம் மீட்பின் மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும் அளிப்ப தாக!

என்றென்றும் போற்றற்குரிய எம் கடவுளாகிய உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக.

ஆமென்.

## திருவருகைக்கால சிந்தனைக்கு

இயேசுவை வரவேற்பதற்காக நம் இதயங்களைத் தயாரித்திட வேண்டுமென்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். உண்மையைசொல்வதென்றால், இயேசு வை வரவேற்பதற்கான தயாரிப்பில் இருக்கின்ற இதயம் எவ்வாறு இருக்க வேண்டும் என கற்பனை செய்துபார்ப்பது கடினமே. ஆகவே, பல ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுவைத் தாங்கிய அந்த எளிய தீவனத் தொட்டியை உற்று நோக்கி, அதிலிருந்து தொடங்குவோம். இந்த ஆண்டு உங்கள் வீட்டை அழகு செய்கின்ற முதன்மையான, மிக முக்கிய மான நம் அலங்கார அம்சமாக நம் இல்லங்களில 'கிறிஸ்துமஸ் குடில் இருக் கட்டும். முடியுமானால், குடிலை அமைப் பதற்காக உங்கள் இல்லத்தில் நல்லதொரு சிறப்பான இடத்தை தெரிவு செய்யுங்கள். அலங்கரிக்கப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் மரத்தின் கீழே குடில் வைப்பதை தவிர்த்திடுவோம். ஏனெனில், கிறிஸ்துமஸ் மரத்தின் அடியிலே பரிசுப் பொருள்கள் எல்லாம் அடுக்கி வைக்கப்படுவதால், மரத்தின் கீழே அமைக்கப்பட்ட குடில் மறைந்து போக வாய்ப்புள்ளது. மாறாக, வீட்டினுள் இதற்கென தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் சிறிய மேசை போன்றதொரு உயரமான அமைப்பின் மீது குடிலை நிர்மாணிப்பதே சாலச் சிறந்தது.

# சமத்துவ சமுதாயத்திற்கு தோள் கொடுப்போம்!

இன்று திருவருகைக்காலம் 2ஆம் வாரத்தில் நுழைகிறோம். அமைதியின் வாரமாகவும் திருமுழுக்கு யோவானின் வாரம் என்றழைக்கப்படுகின்ற இந்த வாசகங்கள் சமத்துவ சமுதாயத்திற்கு தோள் கொடுக்க நம்மை அழைக்கிறது. இன்றைய அமைதியற்ற சூழலுக்கு காரணம் சமத்துவமின்மையே. ஏற்றத் தாழ்வு உள்ள சமூகம் அமைதியை தொலைத்து விடும் என்பதுவே உண்மை. அதற்கான அறைகூவலே இன்றைய வாசகங்களில் வெளிப்படுகின்றது.

பாரூக் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம், பாபிலோனியர்களால் நாடு கடத்தப்பட்டு அடிமைகளைப் போன்று வாழ்ந்து வந்த இஸ்ரயேல் மக்களுக்கு ஆறுதலின் செய்தியை அளிப்பதாய் இருக்கின்றது. "எருசலமே, உன் துன்ப துயரத்தின் ஆடைகளைக் கலைந்துவிடு; கடவுள் உனக்கு அருளும் மாட்சியின் பேரழகை என்றென்றும் ஆடையாக அணிந்துகொள்" என்று, இஸ்ரயேல் மக்களுடைய கண்ணீர் கவலைகள் எல்லாம் மறைந்து, மகிழ்ச்சி பிறக்கும் என்பதைத் தான் பாரூக் அப்படிச் சொல்கின்றார்.

இன்றைய நற்செய்தியில் பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும், மலை குன்று யாவும் தாழ்த்தப்படும்; கோணலானவை நேராக் கப்படும்; கரடுமுரடானவை சமதளமாக் கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்" என்று வாசிக்கின்றோம். இயேசுவுக்கு முன்பாக ஏற்றத்தாழ்வுகள் அதிகமாக இருந்தன. உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன் ஏழை, யூதன், புறவினத்தான் இப்படி பல்வேறு வேறுபாடுகள் இருந்தன. மீட்புகூட சிலருக்கு மட்டும்தான் உண்டு என்ற நிலை இருந்தது. ஆனால், ஆண்டவர் இயேசுவின் வருகையினால் அனைவரும் கடவுள் அருளுகின்ற மீட்பினைப் பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டது; பணக்காரர்களுக்கு மட்டுமல்ல, ஏழைகளும் நற்செய்தியைப் பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டது; யூதர்கள்தான் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் என்றிருந்த நிலை எல்லாரும் கடவுளால் தேர்ந்துகொள்ளபட்டவர்கள் என்று ஆனது

பலவுலடியார் இந்த உண்மையை உணர்ந்த தினால்தான், "இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் வேறுபாடு இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலா 3:28) என்கின்றார்.

மெசியாவின் வருகைக்கு —இயேசுவின் பிறப்பு விழாவிற்கு - நாம் பல்வேறு வழிகளில் நம்மைத் தயாரித்தாலும், நம்மைத் தயாரிப்பதற்கான மிகச் சிறப்பான வழி மனமாற்றம் அடைவதுதான். ஆண்டவருடைய வழியை ஆயத்தப் படுத்துவது அலங்காரப் பொருட்களினால் அல்ல. அசுத்தமான வாழ்வை அப்புறப்படுத்துவதே ஆகும். எல்லாரும் ஒன்றாய் இருப்பார் களாக என்று மன்றாடிய இறைமகன், படைத்தவற்றை எல்லாருமாய் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளவே செய்தார்.

ஆகவே, மெசியா என்னும் இயேசுவின் வருகைக்கு நம்மையே நாம் தயார் செய்யும் விதமாக இதுவே தகுந்த நேரம் என்று உணர்ந்து மனமாறுவோம், இறைவனுக்கு உகந்த வழியில் நடப்போம். கடவுள் தரும் மகிழ்ச்சியையும், மீட்பையும் பெற்று மகிழ்வோம். அதன்வழியாய் இறையருள் நிறைவாய் பெறுவோம்.

த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா

## திருவருகைக்காலம் - 2-ம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | பாருக் 5: 1-9 |
| திரு.பாடல் | 126: 1-2ab. 2cd-3. 4-5.6 |
| 2-ம் வாசகம் | பிலி: 1: 4-6, 8-11 |
| நற்செய்தி | லூக்கா 3: 1-6 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை: வாரம் 2**